முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1416

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.08.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானதேசிகனே அரங்கா வாழ்க
ஞானிகள் துணைகொண்ட தேசிகா வாழ்க
வானவர்கள் மெச்சும் வள்ளலாக வாழுகின்ற
ஞானியே வள்ளலே குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 30 ம் நாள், 15.08.2023 செவ்வாய்கிழமை)
ஊழ்வென்று கலியுக மக்களை மீட்க
உயர்ஞானம் அருளுகின்ற அரங்கனே
3. அரங்கனே உன் கொள்கை உலகை வெல்லும்
அரங்கனே உன் தர்மமே இந்த உலகை ஆளும்
வரங்கள் தந்து அரங்கன் நீ தருகின்ற மகா தீட்சை
வையகத்தில் ஏற்கும் மக்கள் அனைவருமே
4. அனைவருமே கலியில் ஞானிகளாகி
ஆற்றல்பட ஆறுமுகன் என் ஆசிபடவே
ஆசிபட அவரவரும் அழியாமை பெற்று
அகிலமாற்றம் செய்யும் ஞானவான்களாக மாறுவர்
5. மாறவே அற்புதம் உன்னை கொண்டு
கலியில் மகான் சுப்ரமணியர் யானும் நடத்த இருக்க
அறமாக நீ தொடருகின்ற சேவைகள் அத்தனையும்
அகிலத்தில் பாராட்டப்பட்டு இனிதே
6. வரமாக உலகமெல்லாம் வரவேற்புப் பெருகி
வையகத்தில் அரங்கன் உன் தொண்டர்கட்கும்
தர்மத்துக்கும் ஆற்றல் பெருகி இனிதே அகிலமாற்றம் அரங்கன் உன்
அவதார நோக்கமாக ஆறுமுகன் யான் நடத்தி அருள்புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—